[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மார்ச் 23

3. உரிமை மீறல் பிரச்சினை

கரும்பலகைத் திட்டத்திற்குப் புத்தகங்களைத் தேர்வு செய்தல் பற்றி 27-1-1990ஆம் நாளன்று உறுப்பினர் ஒருவர் தெரிவித்தக் கருத்துக்கு கல்வி அமைச்சர் அளித்த பதில் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் பள்ளிக்கூடங்களில் உள்ள நூலகங்களுக்கு வாங்கும் கரும்பலகைத் திட்டத்திற்குப் புத்தகங்களைத் தேர்வு செய்வதில் முறைகேடுகள் நடந்திருப்பதை 27-1-1990 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்றும், அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவையில் அளித்த பதில் தவறானது என்றும், அவை உரிமை மீறல் குறித்த அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது எவ்வாறு உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பது குறித்துச் சுருக்கமாக தன் கருத்தைத் தெரிவிக்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-1-1990 ஆம் நாளன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பினார்கள். கரும்பலகைத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்தின் மானியத்தோடு பள்ளிக்குழந்தைகளுக்கு வாங்கப்படுகின்ற புத்தகங்களிலே தேர்வு செய்கின்ற முறையில் முறைகேடுகள் நடந்து இருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த புத்தகங்கள் 6 வயது முதல் 11 வயதுவரை உள்ள பிள்ளைகளுக்காக வாங்கப்படுகின்ற புத்தகங்கள். 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை படிக்கின்ற பிள்ளைகளுக்காக பள்ளிக்கூடங்களிலேயுள்ள நூலகங்களுக்கு வாங்கப்படுகின்ற புத்தகங்கள்.

10-45 மணி

அந்தப் புத்தகங்கள் வாங்கப்பட்டதிலே, தேர்வு முறையிலே, முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக இங்கே குற்றம்சாட்டினார்கள். குறிப்பாக இரண்டு புத்தகங்களைப் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒன்று தேன்சிந்தும் சிறு மலர்கள். இரண்டு நெல்லிமரம். அவற்றிலே ஏராளமான ஆபாசங்கள் நிறைந்து இருப்பதாகவும், இப்படிப்பட்ட ஆபாசப் புத்தகங்கள் பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சை விதைக்காதா? பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட ஆபாசங்கள் நிறைந்த புத்தகங்கள் இடம் பெறலாமா என்று குற்றம்சாட்டி இங்கே பேசினார்கள். அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றார்கள். அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப்பட்டது. வழக்கை

1990 மார்ச் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப்புத்தகங்களைத் தேர்ந் தெடுத்த முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன் னார்கள். அந்த செய்தி அன்றையதினம் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. குறிப்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை யிலே தெளிவாக அதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "Also the High Court had upheld the Selections'' என்று அந்தப் பத்திரிகையிலே' குறிப்பிடப்பட்டிருந்தது. அதுபோல தினத்தந்தி பத்திரிகையிலே, மேலும் நியாயமான முறையில் தேர்வு செய்யப் பட்டுள்ளது என்று ஹைக்கோர்ட் கூறியுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இதிலே 3 விஷயங்களைச் சொன்னார்கள். மூன்றே மூன்று வாக்கியங்களிலே தான் அவர்கள் அதை சொல்லியிருக்கிறார்கள்.

ஒன்று நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார் கள். இரண்டாவது அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப் பட்டது என்பது. மூன்றாவது வழக்கை விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது ஆகும். ஆக, மூன்று விஷயங் களைச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு சிலர் வழக்குக் குச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மை. முத்துமுருகேசன் என்பவர் இதிலே ஹைக்கோர்ட்டுக்கு வழக்குக்குச் சென்றிருக் கிறார். ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார். அதுபோல மோகன் பராசரன் என்கிற வழக்கறிஞர் திரு. வி. எஸ். வெங்கடேசன் என்பவர் சார்பிலே ஒரு ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார். அந்த மனு மீதான விசாரணை முடிந்துவிட்டதா என்றால் இன்னும் முடியவில்லை. அந்த மனுக்கள் எல்லாம் இன்னும் விசாரணையில் இருக்கின்றன. It has been posted for final disposal அந்த அடிப்படையில் இவைகள் எல் லாம் இறுதி விசாரணைக்காக நீதிபதி முன்னால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்று ரிட் பெட்டிசன் நம்பர் 127/64/1989 என்பதாகும். அந்த மனுவிலே ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே புத்தகங்களை வாங்கக் கூடாது. கல்வி இயக்குநர் வாங்கக் கூடாது என்கிற தடை உத்தரவை அதிலே கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அந்த ரிட் மனுவில், 127/64/1989 ரிட் மனுவில், 20-9-1989 அன்று இடைக்கால தடை உத்தரவுக் கும், எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறார். ஆக, இங்கே, இந்த அவையிலே, கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது தவறான தகவலாகும். தவறான தகவலே இங்கே கொடுத்திருக்கிறார்கள். தவறான தகவல் என்பது மாத்திரமல்லாமல் இந்த அவையை திசை திருப்பும் முயற்சியாகவும் பலரும் இதை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக சில பத்திரிகைகளிலும் இதுபற்றி வந்திருக் கிறது. 'தாய்' பத்திரிகையிலே விஸ்வரூபம் எடுக்கும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டினால் போதுமே.

திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not going into the merits of the case, விஸ்வரூபம் எடுக்கும் கரும்பலகைத் திட்ட ஊழல் விவகாரம் என்கிற தலைப்பிலே, விமரிசனக் கட்டுரை 28-2-1989 இதழிலே வந்திருக்கிறது. அதுபோல 'இந்தியா டுடே' பத்திரிகையில் அரசுச் செலவில் ஆபாசம் என்ற தலைப்பிலே கட்டுரை வந்தது. அதுபோல 'கல்கி' பத்திரிகையிலே இதிலேயுள்ள ஆபாசங்களைப் பற்றி குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். பல ஆபாசங்கள் இடம் பெற்றிருக்கிறதாக சொல்லப்பெற்றிருக்கிற விவகாரத்தில் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளுக்கு, ஊழல்களுக்கு, தவறுகளுக்கு முழுப் பொறுப் பேற்க வேண்டிய கல்வி அமைச்சர் அவற்றை மறைத்துவிட்டு, அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தவறானத் தகவலை தந்து திசைத்திருப்ப முயன்றிருக்கிறார். எனவே, இந்த அறிவிப்பின் மூலம் அவையின் உரிமையை மீறிய குற்றத்திற்கு அவர் ஆளாகியிருக் கிறார். ஆகவே, இந்தப் பிரச்சினையை முழுமையாக விசாரித்து அவையின் உரிமையை மீறிய குற்றத்திற்காக அவர்மீது நட வடிக்கை எடுக்க 'அவை உரிமைக் குழு'வுக்கு இதை அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் இது தொடர்பாக விளக்கம் அளிப்பார்கள்.

10–50 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27—1—1990ல் இங்கே நடைபெற்ற வேறொரு விவாதத்தில், இடையிலே வந்த கரும்பலகைத் திட்டத் தைப்பற்றிய கண்டன உரையை ஒட்டி, நான் அளித்த விடையில் இடையிலே வருகிற 3 தொடர்களை வைத்துக்கொண்டு, ஓர் உரிமைப் பிரச்சினை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், ஒரு ஐயுறவு கொண்டு, அந்த ஐயுறவைத் தீர்த்துக்கொள்ள இந்தத் தீர்மானத்தை வழங்கி யிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். உரிமைப் பிரச்சினை எழுப்புவது என்பது, அவையிலே சொல்ல வேண்டிய ஒரு உண்மை யைச் சொல்ல மறுத்தாலும், அவை அறிந்திருக்கிற ஒரு செய்தியை திசைதிருப்பினாலும் அல்லது அவைக்கு மறைக்கப்பட வேண்டிய அவசியத்திற்கு ஒரு அமைச்சர் ஆளாகி அப்படி மறைத்தாலும் அவையெல்லாம் உரிமைப் பிரச்சினை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

1990 மார்ச் 23] [டாக்டர் க. அன்பழகன்]

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இங்கே அன்றைய தினம் நடைபெற்ற விவாதத்தை திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்த அவையில் இருந்து கேட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளை மேலும் தொடர்ந்து அரசு ஏற்கெனவே நியமித்தபடி நடைபெறுவதற்காகக் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டத்தை ஒட்டி, அந்த அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப் பட்ட மசோதாவில், பச்சையப்பன் அறக்கட்டளை பற்றிய வாதத்தைத் தாண்டி, வேறு பல அறக்கட்டளைகளுக்குச் சென்று, பின்னர் அறக்கட்டளைக்குச் சம்பந்தமே இல்லாத இந்தக் கரும்பலகைத் திட்டம் பற்றி அன்றையதினம் திரு. வீரையன் அவர்களால் பேசப்பட்டது. இது நீதி மன்றத்திலே இருக்கிற வழக்கு என்பது தெரியாதவன் அல்ல நான். நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறபோது, திரு. வீரையன் அவர்கள் அவ்வளவு விரிவாகக் கண்டனங்களை எல்லாம் பேசும்போது, நான் கேட்டுக்கொண்டிருந்தேன் என்றால் திரு. பால சுப்பிரமணியம் அவர்களே அதை உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன். திரு. வீரையன் அவர்கள் பேசிய பிரச்சினையும் நான் சொன்ன பிரச்சினையும் நீதிமன்றத்திலே இருக்கிற அந்த வழக்கில், இடையிலே நீங்கிவிட்ட பகுதி. எப்படி நீக்கப்பட்டுவிட்டது என்பதை நான் விளக்க விரும்புகிறேன். ஒன்று திரு. வீரையன் இங்கே எடுத்துக்காட்டிய அந்த இரண்டு புத்தகங்களும் இங்கே இருக்கின்றன. அந்தப் புத்தகங்களிலே உள்ள ஆபாசம் என்று சொல்லப்பட்ட கருத்தைப் பற்றி இரண்டுவிதமான கருத்துக்கு இடமுண்டு. அதை நான் தனியாக விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். இந்தப் புத்தகங்களை வாங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டது, நான் இந்த அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு 6 திங்கள், 8 திங்கள் முன்னா லும்,—என்னிடம் தேதிகள் எல்லாம் இருக்கின்றன, விவரங்கள் இருக்கின்றன—ஏறத்தாழ ஒரு திங்களுக்கு முன்னாலும், இந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக உள்ள குழு மத்திய அரசு இதற்காக நிதி வழங்குகிற அரசு எந்தவிதமான ஆலோசனையை வழங்கியதோ அதற்கேற்ப அந்த ஆலோசனையை குழு அளவுக்கு நிறை வேற்றும் மாநிலம் என்ற வகையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் உறுப்பினர்கள் பெயர்கள் இருக்கின்றன. அந்த விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஏறத்தாழ ஜனவரி மாதத்திலேயே அந்தக் குழு ஆய்வு நடத்தியது இந்தப் புத்தகங்களைப் பற்றித்தான். பத்திரிகையிலே வந்ததும் அந்தக் காலகட்டத்துப் புத்தகங்களைப் பற்றித்தான். மாண்புமிகு வீரையன் அவர்கள் பேசிய இரண்டு புத்தகங்களும் அந்தக் காலகட்டத்திலே தெரிவு செய்யப்பட்ட புத்தகங்கள்தான். அவைகளிலே குறை இருக்கிறது என்பதை அவர் ஆதங்கத் தோடும் கடுமையாகவும் சொல்லும்போது அவற்றை எல்லாம் படித்தால் அடுத்த தலைமுறையே பாழாகுமே என்று சொன்ன

போது, இது நூலகத்திற்காக வாங்கப்பட்ட புத்தகங்கள் என்ற ஒரு கருத்தையும், இந்தப் புத்தகங்களிலே தவறான கருத்துக்கள் இருந்தால் அந்தப் புத்தகங்களைத் திரும்பக்கூட நூலகங்களிலிருந்து பெற்றுவிடலாம், நாம்தான் அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னேன். 200 புத்தகங்களிலே 2 புத்தகங்கள், 2 புத்தகங்களிலே 4 பக்கங்கள், 4 பக்கங்களிலே 8 வரிகள். எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் அதைப் பார்த்து, அது கூடாது என்பதற்கு என்னுடைய மனம் திருப்தி அடையும்படிச் சொன்னால் அதை அந்த இலாக்காவிற்குத் தெரிவித்து, அந்த இரண்டு புத்தகங்களையும் திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள் என்றால்—அவற்றை ஒழுங்காக வைத்திருக்கிறார்களோ, இல்லையோ பள்ளிக்கூடங்களில் இருந்தால் திருப்பி அனுப்புவார்கள், அது மட்டுமல்ல, அப்படி இருக்குமானால் அந்தக் குறையைப் போக்கலாம் என்று நான் சொல்லிவிட்டேன். குறை ஏற்பட்டது நம்முடைய காலத்திலே அல்ல. குறை இருக்குமானல் அதைப் போக்கலாம். அதற்குள் விதிமுறைப்படிதான் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். புத்தக வியாபாரிகளைப் பொறுத்த வரையில் அவரவர்களுக்கு ஒரு கருத்து இருக்கக்கூடும். அந்த எண்ணத்திலே திரு. வீரையன் அவர்களுக்கு அந்தப் பதிலைச் சொல்கிறபோது படித்துப் பார்க்கலாம் என்று சொன்னேன். அதை ஒட்டி நான் சொன்ன வாசகத்தை சுருக்கமாக 3 வரிகளை இங்கே திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

'நீதிமன்றத்திற்குச் சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள்'—அதில் ஒரு வழக்கை மட்டும் குறிப்பிடவில்லை; ரிட்மனு பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. ரிட் மனுவை ஒட்டி ''பார் அண்டு அகென்ஸ்ட்'' பல்வேறு விளக்கங்கள் இந்தப் பக்கம் 20 பேர் என்றால் அந்தப் பக்கம் 30 பேர் வழக்கில் ஈடுபட்டுள்ளனர். அந்த விவரங்களை எல்லாம் நான் படித்து இங்கு நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அடுத்து, ''அந்த வழக்கு முழு அளவில் விசாரிக்கப்பட்டது''—இதில், அந்த வழக்கில் என்று நான் சொன்ன இடத்தில் அந்த வழக்கில் இது முழு அளவில் விசாரிக்கப்பட்டது என்றுதான் கூறினேன். இங்கே திரு. வீரையன் அவர்கள் பேசிய அந்தக் கருத்துக்குத்தான் அந்த ஒரு வரி, என்ன விசாரிக்கப்பட்டது என்று நான் சொல்லியிருக்கிறேன் என்றால் இதிலே பார்த்தால் தெரியும். வழக்கை விசாரித்த நீதிபதி இந்தக் குழு அந்த நூலக புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் புத்தகங்கள் என்றால்—இந்த திட்டத்தில் இரண்டாம் கட்டத்தில் வாங்கிய புத்தகங்கள். ரிட் வழக்கு—மூன்றாம் கட்டத்தில் வாங்கவேண்டிய புத்தகங்களைப்பற்றி. அதற்காகத்தான் ரிட் மனு. அந்த ரிட் மனு அடிப்படையிலே, அந்தப் புத்தகங்களை வாங்குவதை நிறுத்திவைத்து, எங்களுடைய வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்ட காரணத்தால் இடைக்காலத்

தடை உத்தரவு; அவர்களே, குறிப்பிட்ட அந்தத் தேதியில் நீதிபதியால் வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த இடைக்காலத் தடை உத்திரவுப்படி இன்னும் அந்தப் புத்தகங்கள் வாங்கப் படவில்லை.

10-55 மணி

மூன்றாவது கட்டத்திற்கான புத்தகங்களை ஏறத்தாழ மார்ச் திங்களுக்குள் வாங்கினால்தான் மத்திய அரசு தருகிற உதவித் தொகை நமக்குக் கிடைக்கும் என்றாலும் கூட, நீதி மன்றத்திலே இருக்கிற தடை உத்திரவு காரணமாக அந்தப் புத்தகங்கள் தொடப்படவில்லை; வாங்கப்படவில்லை, அதற்கு என்ன முறை என்பது நீதிமன்றத்தாலே தெரிவிக்கப் படுவதற்குக் காத்துக்கொண்டு இருக்கிறது அரசு. இந்த வழக்கின் இடையிலே—மூன்றாவது கட்டத்திலே வாங்குகிற புத்தகங் களுக்காகப் போட்ட வழக்கின் இடையில்—இரண்டாவது கட்டத்திலே வாங்குகிற புத்தகங்களையும் தடை செய்ய வேண்டும் என்று மூன்று அல்லது நான்கு முறை கோரிக்கை எழுப்பினர். அந்த விவரத்தை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

மேற்படி மனுதாரர் திரு. முத்துமுருகேசன் என்பவர் இரண் டாவது கட்டத்தில் தெரிவு செய்த புத்தகங்களை வாங்குவதை யும் தடை செய்ய வேண்டும் என்றும் வழக்கு விசாரணையின் பொழுது கோரிக்கை எழுப்பினார். அந்த நிலையில் முதற் கட்டம் மற்றும் இரண்டாவது கட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட புத்தகங்களைப் பரிசீலனைக்கு அனுப்புமாறு மாண்புமிகு நீதிபதி அவர்கள் உத்திரவிட்டார். மூன்றாவது கட்டப் புத்தகங் கள் வாங்குவது குறித்து வழக்குச் சம்பந்தமான விசாரணையின் போது, இரண்டாம் கட்டப் புத்தகங்கள் வாங்கவும், தடை கோரி விண்ணப்பம் வந்தபோது நீதிபதி அவர்கள் புத்தங்களைப் பார்த்த பின்பே முடிவு சொல்வதாகப் பதில் சொல்லிவிட்டார். முதற்கட்ட இரண்டாம் கட்டம் சம்பந்தமான புத்தகங்கள் நீதிமன்றத்தில் சேர்ப்பிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் அரசு வழக் கறிஞர் இந்தப் புத்தகங்கள் எல்லாம் இங்கே கொண்டுவந்து கொடுக்கப்பட்டன என்று தெரிவித்துவிட்டார். தொடர்ந்து மூன்றாம் கட்டம் பற்றிய வழக்கு நடந்தபோது இரண்டு அல்லது மூன்று முறை மனுதாரருடைய வழக்கறிஞர் இரண்டாம் கட்டத் தெரிவு சம்பந்தப் பட்ட புத்தகங்கள் வாங்குவதைத் தடை செய்யக் கோரியபோது நீதிபதி அவர்கள் தடை விதிக்க மறுத்துவிட்டார். நீதிபதிகளிடத்தில் மூன்றாம் கட்டம் பற்றி எதற்குத் தடை உத்தரவு வாங்கப்பட்டு இருக்கிற தோ அந்தப் புத்தகங்கள் விளம்பரம் செய்த கட்டத்திலே இருக்கிறது; விளம்பரம் செய்து அனுப்ப வேண்டு

மென்று கேட்ட அந்த இடத்திலே அது அப்படியே இருக்கிறது. இரண்டாவது கட்டப் புத்தகங்களை நீதிபதி பார்த்துத் தடை விதிக்கத் தேவையில்லை என்று கூறிவிட்டார். அவர் புத்தகங்களைப் படித்தார் என்றெல்லாம் நான் சொல்வதாகப் பொருள் அல்ல. புத்தகங்கள் அவரிடத்திலே ஒப்படைக்கப்பட்டன. தடை விதிக்கக் கேட்டார்கள். தடை விதிப்பது ஒப்புக் கொள்ளப் பட வில்லை. எனவே அந்த அளவுக்கு தடை விதித்துத்தான் இதிலே நடைபெற்று இருக்கிற கெடுதியை, தீமையை நீக்க வேண்டும் என்ற நிலையை நீதிபதி அவர்கள் தெரிவிக்காத காரணத்தால் இந்தத் திட்டம் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செயற்படுத்தப் பட வேண்டிய திட்டம் என்ற முறையில் செயற்படுத்தப் பட்டுவிட்டது. எனவே இதற்குத் தடை இல்லை என நீதிபதி தெரிவித்து விட்டார். மேலும் முதற் கட்டம், இரண்டாம் கட்டம் ஆகிய இரண்டிற்குமே வழக்கு முடிந்ததாகவே கருத வேண்டும். அதைப் பற்றி இப்பொழுது எழுப்ப முடியாது. ஏனென்றால் அது நடைபெற்ற காரியம்.

மூன்றாவது கட்டம் வழக்கிலே இருக்கிறது. நான் பேசுகிற போது திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கம் சொல்வதற்காகத்தான் நீதிமன்றத்திலே சிலர் வழக் கிற்குச் சென்றார்கள். அது ரிட் மனுவா, என்ன மனு, யார் யார் என்ற அந்த விவரத்திற்குள் நான் போகவில்லை. அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால் அது பற்றிப் பேசுகிற ஒரு உரிமை எடுத்துக்கொள்கிற அளவிற்கு நான் துணிந்தவனும் அல்ல; அப்படி ஒரு பழக்கம் எனக்கு இல்லை. அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப்பட்டது. அந்த வழக்கில் இந்தப் பிரச்சினை—திரு. வீரையன் அவர்கள் இங்கு எழுப்பிய பிரச்சினை விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி இந்தக்குழு அந்தப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக்கொண்டு இருக்கிறார். இதற்குத் தடை விதிக்கவில்லை. இவ்வளவுதான் நான் சொல்லி இருக்கின்றேனே தவிர மாண்புமிகு உறுப்பினர் கருதுகிற அந்த ரிட் வழக்குபற்றிப்பேசி, அந்த வழக்கை வைத்து திசை திருப்புவதற்கு எனக்கு அவசியமே இல்லை. அந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டு இருக்கிறது. தடை உத்திரவு வழங்கியதை மாற்றுவதற்குச் சட்டப்படி முறைப்படி அரசாங்கத்தினுடைய வழக்கறிஞர் நீதிமன்றத்திலே விண்ணப் பித்துக் கொள்கிற கட்டத்திலேதான் இன்றைக்கும் இருக்கிறார்.

நான் பேசியது சம்பந்தப்பட்ட இரண்டு புத்தகங்களுக்காக எழுப்பப்பட்ட அந்த வாதத்தில் புத்தகங்கள் தெரிவு செய்வதில் நடைபெற்று இருக்கக்கூடிய குற்றங்களைக் களையலாம் என்று சொன்னாலும் கூட ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு நீதிபதிக்கு முன்னிலையிலே அந்தப் புத்தகங்கள் காட்டப்பட்டு இருக்கிறது என்ற அளவிற்குச் சொன்ன பதிலே தவிர,

மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்கள் கருதுவதைப் போல இந்த மன்றத்தினுடைய உரிமையைக் குறைக்கவோ, மாற்றவோ, திசை திருப்பவோ நான் முயற்சிக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இருவரது கருத்துக்களையும் ஆய்ந்த பின் எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். இராதா (எதிர்க் கட்சித் தலைவர்), திரு. குமரி அனந்தன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எச். எம். ராஜு, திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. உ. ரா. வரதராசன், திரு. சோ. அழகர்சாமி, திரு. ரெ. பிச்சைமுத்து மற்றும் திருமதி பாப்பா உமாநாத் ஆகியோர் தமிழக அரசின் வருவாய்த் துறைப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் எழுந்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கோரி அறிவிப்புக்களைக் கொடுத்து உள்ளார்கள். இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. யூ. கே. வெள்ளிங்கிரி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்பையும் கொடுத்து உள்ளார். இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

11—00 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரசு நிர்வாகம் என்று சொன்னாலே, அதிலே முக்கிய பங்கை வகிக்கின்ற துறை வருவாய்த் துறையாகும். அரசாங்கம் பல்வேறு நலத் திட்டங்களை அமல்படுத்தவேண்டும் என்று சொன்னாலும், மக்களுக்குத் தேவையான அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று சொன்னாலும், அது வருவாய்த்துறை அலுவலர்களால் முடித்து வைக்கப்படுகிறது. அப்படிப்பட்ட அந்த வருவாய்த் துறையைச் சேர்ந்திருக்கின்ற அலுவலர்கள் தங்களுடைய மனக்குறையைத் தெரியப்படுத்துகின்ற அளவிற்கு கடந்த ஓர் ஆண்டு காலமாக அரசினுடைய கவனத்திற்கு பல